ளை, வேலூர், மதுரை, திருச்சி, கோவை, சேலம், நெல்லை, கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சை, திண்டுக்கல், புதுச்சேரி, பெங்க

தினத்தந்
DAILY THANTHI

வேலூர் (15-2-2013)
வெள்ளிக்கிழமை

நந்தன ஆ
ஹிஜ்ரி 1434

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில்

# தேசிய அளவிலான கருத்தரங்கம்

திருப்பத்தூர், பிப். 15-

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் முதுகலை மேலாண்மை துறை சார்பில், "அண்மை கால மேலாண்மை" என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம் நடந்தது. கல்லூரி முதல்வர் அ.மரியசூசை தலைமை தாங்கி, கருத்தரங்க ஆய்வு கட்டுரையை வெளியிட்டார். கருத்தரங்க செயலாளர் சசிக்குமார் வரவேற்றார். சென்னை சாய்ராம் கல்லூரியின் மேலாண்மை துறை இயக்குனர் கே.மாறன், தனியார் துறை முதுநிலை மேலாளர் ஜே.டோனிபால் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தூய நெஞ்சக் கல்லூரியின் மேலாண்மை துறை இயக்குனர் டி.மரியஅந்தோணிராஜ், ஆப்ரகாம் பனம்பாரா ஆய்வு மைய இயக்குனர் சி.எம்.வர்கிஸ் ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினர். பேராசிரியர்கள் ஜோன் கிங்ஸ்லி, சசிகாந்த், அலெக்சாண்டர், ஆரோக்கியமேரி ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். கருத்தரங்கில் பல்வேறு மாநில, மாவட்டங்களில் இருந்து மேலாண்மை துறை மாணவ-மாணவிகள், ஆராய்ச்சியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.